திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, என்னுடைய தொகுதியாகிய ஆண்டிப்பட்டியில் வரிசைநாடு பகுதி மலைப்பாங்கான பகுதியாக இருப்பதால், அங்கு ஜீப் பஸ்கள் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமசந்திரன்: தலைவரவர்களே, அது ஜீப் பஸ்கள் விடுவதற்குத் தகுதியான இடமாக இருந்தால் அரசாங்கம் அதைப் பரிசிலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் மலைப் பாங்கான இடமாக தஞ்சை மாவட்டம் இல்லை என்று சொன்னார்கள். இருப்பினும் அங்கே மிகக் குறுகிய பாதைகள் ஏராளமாக இருப்பதால், பெரிய பஸ்கள் போவதற்கு வசதி இல்லாமல் இருப்பதால், அப்படிப்பட்ட இடங்களில் ஜீப் பஸ்கள் விடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் ஜீப் பஸ்களுக்குப் பதிலாக மினி பஸ்களே போதுமானது.

அரசு பேருந்துகள்

*100 வினா.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசாங்க பஸ்கள் வழியில் பழுதடைந்து விட்டால் தனி மெக்கானிக்குகளைக் கொண்டு அவசர காலங்களுக்கு ரிப்பேர் செய்ய அரசு அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இல்லை. ஆயினும், பேருந்துகள் செல்லும்போது வழியில் பழுதடைந்து விட்டால் அவற்றைப் பழுதுப் பார்ப்பதற்காகத் தேவையான தொழில் நுட்பப் பணியாளர்கள், சாதனங்கள் ஆகியவற்றைக் கொண்ட பழுதுபார்க்கும் இயல் ஊர்திகளை அமைக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திரு. கே. எ. வகாப்: இப்படி பழுதடைந்த வண்டிகளை ரிப்பேர் செய்வதற்கு அரசாங்கம் தக்க ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது என்றாலும் அங்கங்கே ரிப்பேர் ஆகிறபோது உடனடியாக தனியார் மெக்கானிக்குகளிடமும் சர்வீஸ் கோரி ரிப்பேர் செய்வதற்கு அனுமதித்தால் வண்டிகள் சரியாகச் செல்வதற்கு வழியேற்படும். இதற்குச் சர்க்கார் அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1972 டிசம்பர் 8]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிப்பட்ட நபர்களிடம் ரிப்பேர் செய்ய அனுமதி கொடுத்தால் அதற்காகும் பில்கள்பற்றி கணக்குப் பார்க்க வழிவகைகள் செய்யப்படவில்லை. ஆகவேதான் ஒவ்வொரு பணிமனைக்கும் ஒரு ப்ரேக் டவுன் வான் கொடுத்து வேண்டிய வசதிகளும், கருவிகளும், மெக்கானிக்குகளும் கொடுத்து உடனடியாகப் பழுது பார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் நடுவில் ப்ரேக் டவுன் ஆனால் பின்னால் வருகிற வண்டிகளில் இந்த வண்டிப் பயணிகளையும் ஏற்றிச் செல்ல வசதி செய்யப்பட்டிருக்கிறது. பெரிய ரிப்பேராக இருந்தால் தனியாகவே ஒரு வண்டி அனுப்பி பிரயாணிகளை ஏற்றிச் செல்லவும் வழி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மின்னல் வேகத் துரித வண்டிகள் சில நேரங்களில் வழியில் ரிப்பேர் ஆகிவிடுகிறது. பழுது பார்த்து வண்டிகள் செல்ல மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே மின்னல்வேகத் துரித வண்டிகளின் ப்ரேக் டவுன்கள் ரிப்பேர் செய்யப்படுவதற்கு முதலிடம் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனை கவனிக்கப்பட்டு வருகிறது. விரைவுப் பேருந்துகளின் ப்ரேக்டவுன் குறைந்திருக்கிறது. ஆயினும் ஒன்றிரண்டு ஏற்பட்டாலும் பயணிகளுக்கு மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன என்பதை உணர்கிறோம். ஆகவேதான் தமிழ்நாடு முழுவதும் ஓடுகிற துரித வண்டிகளுக்கு ஒயர்லஸ் சிஸ்டம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இதன்மூலம் வண்டிகள் வன்முறையினால் தாக்கப் பட்டாலும், ப்ரேக் டவுன் ஆனாலும் துரிதமாக அருகில் உள்ள நிலையத்திற்கு அவர்கள் செய்தி அனுப்ப வழியேற்படும். இது சம்பந்தமாக பாரத் எலக்ட் ரானிக் கம்பெனியுடன் அரசு தொடர்பு கொண்டுள்ளது. முதலில் 15 லட்சம் செலவாகும் என்றும், பின்னர் ஆண்டுக்கு 3 லட்சம் செலவாகும் என்று சொல்லி யிருக்கிறார்கள்.

திரு. ஆ. பரந்தாமன் : விழா நேரங்களிலாவது மொபைல் மெக்கானிக்கல் வான் விடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திருத்தணி விழாக் காலத்தில் அது போல வண்டிகள் விடப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர் அறிவார்.

திரு. நா. வீராசாமி : பழுது அடைந்துவிட்டால் ரிப்பேர் செய்வதற்கு வண்டிகள் அனுப்பலாம், தொழிலாளர்களை அனுப்பலாம். ஆனால் சாதாரணமாக பஞ்சர் ஆகிவிட்டால்கூட வண்டியில் ஸ்டெப்னி, ஸ்பானர் இல்லாத காரணத் தினால் மாற்று டயர் மாற்ற முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே இனி எல்லா வண்டிகளிலும் ஸ்டெப்னி, ஸ்பானர் போன்றவைகள் இருக்க ஏற்பாடு செய்யப் படுமா ?

[1972 டிசம்பர் 8

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த யோசனை சம்பந்தமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஸ்டெப்னி, ஸபானர் எந்த வண்டியிலாவது இல்லை என்றால் அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

திரு. ரா. ரா. முனுசாமி : நம்முடைய அரசாங்க பஸ்—குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்டேட்மென்ட் வேண்டாம். கேள்வி போடுங்கள்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் ப்ரேக் டவுன் ஆகிறபோது பொதுமக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்புகள்

(அ) பேரவைத் துணைத் தலைவர்மீது கொடுக்கப்பட்டிருக்கும் தீர்மானம் குறித்து

Mr. DEPUTY SPEAKER : I wish to inform the Hon. Members that on 7th December 1972 I have received two resolutions under Rule 52 of the Tamil Nadu Legislative Assembly Rules for the removal of the Deputy Speaker from office, from hon. Members Thiru K. T. K. Thangamani and Thiru A. R. Marimuthu. According to rules necessary action will be taken up in due course.

(3) அமைச்சரின் அறிக்கைகள்

(அ) திருச்சி நிகழ்ச்சிகள் நீதி விசாரணைக்கு விடப்படுவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, பேரவைக்கு, பேரவை விதி 82-இன் கீழ் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இரண்டு அறிக்கைகளை அளிப்பார்கள்.